www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 8

தேர்வு எண் | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022-23

## தமிழ்

நேரம் : 2.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 14X1=14

**அ)சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ------
   (அ) வைப்பு (ஆ) கடல் (இ) பரவை ஈ) ஆழி
2. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது -------
   (அ) கடல் (ஆ) ஓடை (இ) பரவை ஈ) ஆழி
3. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ------- மதிக்கின்றனர்
   (அ) தாயாக (ஆ) தந்தையாக (இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
4. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ------- நீட்சியாகவே உள்ளது.
   (அ) மருந்தின் (ஆ) உடற்பயிற்சியின் (இ) உணவின் ஈ) வாழ்வின்
5. என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் ------- இன்றி வாழ்ந்தார்.
   (அ) சோம்பல் (ஆ) அகம்பாவம் (இ) வருத்தம் (ஈ) வெகுளி
6. 'மலர் பானையை வனைந்தாள்' – இத்தொடர் ------ பொருளைக் குறிக்கிறது.
   அ) ஆக்கல் ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்
7. கண்ணா வா! – என்பது ------த் தொடர்.
   அ) எழுவாய் ஆ) விளி இ) வினைமுற்று ஈ) வேற்றுமை
8. 'விலங்கொடித்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
   அ) விலம் + கொடித்து ஆ) விலம் + ஒடித்து இ) விலன் + ஒடித்து ஈ) விலங்கு + ஒடித்து
9. 'ஆனந்த வெள்ளம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் -------
   அ) ஆனந்த + வெள்ளம் ஆ) ஆனந்தன் + வெள்ளம்
   இ) ஆனந்தம் + வெள்ளம் ஈ) ஆனந்தர் + வெள்ளம்
10. விகாரப் புணர்ச்சி ------ வகைப்படும்
    அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு

**ஆ).பொருத்துக.**

11. மட்பாண்டம் – தோன்றல்
12. மரவேர் – இயல்புப் புணர்ச்சி
13. மணிமுடி – கெடுதல் விகாரம்
14. கடைத்தெரு – திரிதல் விகாரம்

**II.எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 6X2=12

15. உலகம் எவற்றால் ஆனது?
16. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
17. திரு. வி. க சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.
18. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
19. அரசன் தண்டிக்கும் முறை யாது?
20. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
21. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
22. பகத்சிங் கண்ட கனவு யாது?
23. எம். ஜி. ஆர் நாடகத் துறையில் ஈடுபடக் காரணம் என்ன?

**III.எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 4X2=8

24. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

25.எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

26.சந்திப்பிழை என்றால் என்ன?

27.நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

28.இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

29.வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

**IV.அடிபிறழாமல் எழுதுக.** 4+ 2=6

30. "கற்றோர்க்குக் கல்வி" – எனத் தொடங்கும் கல்வி அழகே அழகு பாடலை எழுதுக.

31. "இதனை இதனால்" – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**V.எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 4x4=16

32.தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

33.எவையெல்லம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

34.நோய்கள் பெருகக் காரணம் என்ன?

35.கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.

36.ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

37.தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

38.நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.

**VI.எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி .** 2x6=12

39.அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

40.அ) இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுவீர்கள்?

(அல்லது)

ஆ) சிறந்த அரசியல் தலைவருக்கு இருக்கவேண்டிய பண்புகளாக நீங்கள் கருதுவன யாவை?

**VII.எவையேனும் ஒன்று மட்டும் விடையளி.** 1x8=8

41. அ) காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) அறிவுசால் ஔவையார் – என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

**VIII.கட்டுரை ஒன்றுக்கு மட்டும் விடையளி.** 1x8=8

42.அ) நூலகம் (அல்லது) ஆ) கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

**IX.கடிதம் ஒன்றுக்கு மட்டும் விடையளி.** 1x8=8

43.அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

**X.அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 8x1=8

44.கலைச்சொல் அறிக Chief Minister

45.சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக. சோறு ------ (தின் / உண்)

46.வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக. உறங்கினாள்

47.பொருத்தமான சொல்லுருபு இட்டு நிரப்புக. இடி ---- மழை வந்தது. (உடன் / பொருட்டு)

48.உவமைத் தொடரைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க. குன்றின் மேலிட்ட விளக்கைப் போல

49.தமிழெண் அறிக. உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 6

50.வினாத்தொடராக மாற்றுக. காட்டில் புலி நடமாட்டம் உள்ளது.

51. நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக. பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com